மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதி, இராமுத்தேவன்பட்டி கிராமம் அருகே விவசாயப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சி மையங்கள், மாதிரிப் பண்ணைகள் அமைக்க ஆராய்ச்சி நடத்தியதாக அறிகிறேன். இந்த நிதி ஆண்டிலாவது அந்த ஆராய்ச்சி மையங்களையும், மாதிரிப் பண்ணைகளையும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரு ஆராய்ச்சி பண்ணை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய அமைத்த குழு, ஏழு இடங்களை பார்வையிட்டு, மேற்படி பண்ணையை சேவல்பட்டியின் பக்கத்தில் அமைக்க 500 ஏக்கர் பரப்பளவில் கால்நடை, தீவனப் பயிர் மற்றும் விவசாயம், தோட்டக்கலை, வனப் பயிர் சம்பந்தமான ஆராய்ச்சிகளைத் தொடங்கலாம் என்று சிபார்சு செய்துள்ளது. ஆனால், நடப்பு ஐந்தாண்டு திட்டத்தில் தகுந்த நிதி ஒதுக்கீடு இல்லாததால் அந்தத் திட்டத்தை உடனடியாகத் தொடங்குவதற்கில்லை. போதிய நிதி வசதி கிடைக்கும்போது அது தொடங்கப்படும்.

திரு. கா. செ. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலமாக ஆராய்ச்சி மையங்கள், மற்றும் மாதிரிப் பண்ணைகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? புதிதாக எங்கெங்கு துவக்கப்பட இருக்கின்றன? எல்லா மாவட்டங்களிலும் மாதிரிப் பண்ணைகளை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

பருத்தி விலை.

747 (*வினா எண் 9074) திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் பயனுறும் வகையில் பருத்தி விலையை உயர்த்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1986 மே 14]

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் பருத்தியின் விலை ஏறுவதும், இறங்குவதுமாக உள்ளது. ஆனால், மகசூலுக்குத் தேவையான இடுபொருட்களின் விலை ஆண்டுக்கு ஆண்டு ஏறுகிறதே தவிர, இறங்குவது இல்லை. ஆகவே, பருத்தியின் விலை ஏறினாலும், இறங்கினாலும், இடுபொருட்களின் விலை ஏறிக்கொண்டே போவதினால், விவசாயப் பெருமக்கள் மிகவும் வேதனை அடைந்துள்ளார்கள். அவர்கள் அவதியைப் போக்குகின்ற இந்த அரசு, விவசாயிகளுக்கு உழைப்புக்கு ஏற்றவாறு ஊதியம் கிடைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பருத்தியைப் பொறுத்தவரையில், பருத்தியின் கொள்முதல் விலையை மத்திய அரசின் விவசாய விளைபொருள் விலைகளை நிர்ணயிக்கும் குழு முடிவு செய்து, இரகவாரியாக கொள்முதல் விலைகளை நிர்ணயம் செய்து மாநில அரசுக்குத் தெரிவிக்கிறது. இந்தக் கொள்முதல் விலைகளின் அடிப்படையில்தான், நாம் அந்த விவசாயப் பெருமக்களுக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால்தான் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வதுபோல், ஆண்டுக்கு ஆண்டு பருத்தியின் விலையையும் நிர்ணயம் செய்து மற்ற மாநிலங்களுக்கு நம் அரசு வழிகாட்டியாக இருக்கும் முறையில் செயல்பட முன்வருமா? மைய அரசுக்கு நம் அரசு எவ்வளவு விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது? அதற்கு மைய அரசு எவ்வளவு தர முன்வந்துள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மத்திய அரசு பருத்தியைப் பொறுத்தவரையில் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்து அனுப்பியதற்குப் பிறகு, மாநில அரசு அதை மாற்றம் செய்ய வழியில்லை. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், நாம் எம்சியு 5 பருத்திக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 650 தரவேண்டும் என்று பரிந்துரை செய்தோம். மத்திய அரசு 555 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறது. எம்சியு 7-க்கு ரூ. 600 பரிந்துரை செய்தோம், அவர்கள் 500 என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். எல்ஆர்எ 5166-க்கு ரூ. 550 என்று நிர்ணயம் செய்தோம். அவர்கள் ரூ. 505 என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். வரலட்சுமி பருத்திக்கு 700 ரூபாய் என்று நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். மத்திய

[1986 மே 14

அரசு 577 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிக்கிறார்கள். ஆகவே நாம் செய்யக்கூடிய பரிந்துரைக்கும், மத்திய அரசு நிர்ணயிக்கக்கூடிய விலைக்கும் தொடர்பில்லாத காரணத்தால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு சில பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இருந்தாலும் உரிய வகையில் விவசாயப் பெருமக்கள் உற்சாகப்படுகிற அளவிற்கு மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் எல்ஆர்ஏ காட்டன் விலை மிகவும் குறைந்துவிட்டது. அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அரசு நியாயமான விலையில் பருத்தி கொள்முதல் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்த நியாயமான விலை என்பதில் தான் சிக்கல் இருக்கிறது. நாம் பரிந்துரை செய்கிற விலைக்கும் மத்திய அரசு நிர்ணயிக்கிற விலைக்கும் சிக்கல் இருக்கிறது. இருந்தாலும் மாநில அரசு உரிய அளவில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, மத்திய அரசு பருத்தியைப் போல கரும்பு, நெல் போன்றவைகளுக்கும் விலை நிர்ணயம் செய்கிறார்கள். மாநில அரசு ஊக்கத்தொகையாக ஒரு தொகையை வழங்குகிறது. அதைப்போல மாநில அரசு பருத்தி உற்பத்தியாளர்களுக்கும் ஒரு குவிண்டாலுக்கு இவ்வளவு என்று மானியமாக வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதைப் பெரும்பாலும் வாங்குவது இந்திய பருத்திக் கழகம் தான். ஆகவே இதை அதிகப்படுத்துவதற்கு வழியில்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, தமிழக அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்த விலை மத்திய அரசு அறிவித்த அடிப்படை விலையைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது. தமிழக அரசு சிபாரிசு செய்த அந்த விலையின் அடிப்படையில் தமிழ் நாடு தனிப் பருத்திக் கழகத்தை ஏற்படுத்தி, விவசாயிகள் மத்தியில் தேங்கிக் கிடக்கிற அதிகமான நீண்ட இழை பருத்தியைக் கொள்முதல் செய்வதற்கு இந்த ஆண்டே அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1986 மே 14]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கனவே அதுபற்றிய சாத்தியக்கூறுகளை எல்லாம் நாம் ஆராய்ந்து பார்த்தோம். மராட்டிய மாநிலத்தில் அமைந்திருப்பதைப் போல தனியாக பருத்திக் கழகத்தை அமைக்கலாமா என்று பார்த்தோம். ஆனால் அதற்கு ஆகக்கூடிய செலவு மற்றவைகளைக் கருத்திலே கொண்டு பார்க்கிறபோது நம்மாலே இப்படி தனிப் பருத்திக் கழகத்தை நடத்த வாய்ப்பில்லை என்கிற நிலையில்தான் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

திரு. கோ. வீரய்யன் : தலைவர் அவர்களே, பருத்தி உற்பத்திச் செலவைப் பொறுத்தவரையில் மிகவும் கூடியிருக்கிறது. ஆனால் பருத்தி விலை மூன்று ஆண்டு காலமாக தொடர்ச்சியாக வீழ்ந்து கொண்டிருக்கிறது. மாநில அரசு ஒரு விலையை சிபாரிசு செய்திருக்கிறது. மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற விலையை விட கீழே போகிறபோது, அந்த விலையை விட கீழே போகாமல் இருப்பதற்கான உத்தரவாதத்தை மாநில அரசு ஏற்படுத்துமா? சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், கூட்டுறவுத் துறை, அல்லது வேளாண்மைத் துறை என்று இப்படி ஏதாவது துறையின் மூலமாக கூட்டுறவு நூற்பலைகளுக்குத் தேவைப்படுகிற பருத்தியையாவது நேரிடையாக மாநில அரசு கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கையெடுக்குமா? இந்திய பருத்திக் கழகத்தின் மூலமாக தமிழக அரசு கொள்முதல் செய்வதற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்துவதற்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உற்பத்திச் செலவு அதிகமாகியிருக்கிறது என்பதை நாம் கணக்கிலே கொண்டுதான் அதற்குரிய நியாயமான விலை கொடுக்கவேண்டுமென்று பரிந்துரைகளை வழங்கியிருக்கிறோம். ஆனாலும் மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற அந்த விலைக்கும் குறையாமல் விவசாயப் பெருமக்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் நாம் உரிய நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகிறோம். தஞ்சை மாவட்டத்தில் சிக்கல் ஏற்பட்டபோதும், நாம் அதுபோன்ற முயற்சியை எடுத்து, விவசாயப் பெருமக்களிடமிருந்து பருத்தியை வாங்குவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்தோம். அந்த வகையில்தான் மாநில அரசு முயற்சி எடுக்க முடியும். அந்த முயற்சியை மாநில அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 748 மற்றும் 749 ஆகியவை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.